**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2021–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 16–ஆம் நாள் திங்கள் கிழமை

**அசல் வழக்கு எண். 114/2021**

**CNR.NO. TNDG01-001754-2021**

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அய்யம்பாளையம் கிராமம், அய்யம்பாளையம் பேரூராட்சி வார்டு எண்.13, மார்க்கெட் தெருவில் வசித்து வரும் நாகப்பன் பல்லவராயம் அவர்கள் குமாரர் இந்து, சுமார் 71 வயது உள்ள என். மாரிமுத்து

-------வாதி

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அய்யம்பாளையம் கிராமம், அய்யம்பாளையம் பேரூராட்சி வார்டு எண். 12, புதுப்பட்டி பாதை தெருவில் வசித்து வரும் முத்துவீரன் அவர்கள் குமாரர் இந்து, சுமார் 59 வயது உள்ள ஏ.எம்.மணிவேல்.

-------பிரதிவாதி

இவ்வழக்கானது, பிராது தொகை ரூ .23,11,413/–ஐயும், அசல் தொகை ரூ.15,00,000/–க்கு பிராது தேதி முதல் தொகை செலுத்தும்வரை 12% பின்வட்டியும் மற்றும் செலவு தொகைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா பரிகாரத்தின் மதிப்பு ரூ .23,11,413/– அதற்கு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 22–ன் படி நீதிமன்ற கட்டணம் ரூ.69,344/– செலுத்தப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள்–16.03.2021, 01.04.2021, 16.04.2021.

தாவா கோப்பில் எடுக்கப்பட்ட நாள் – 07.04.2021.

வழக்குமூலம் எழுந்த நாள் –12.10.2015, 01.10.2018, 20.06.2016, 03.05.2019, 15.07.2016, 03.05.2019, 07.08.2017, 15.07.2020, 15.02.2021, 16.02.2021 – அய்யம்பாளையம், ஆத்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

**தீர்ப்பாணை**

இவ்வழக்கானது இன்று 16.08.2021–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு . எஸ்.

கிருஷ்ணகுமார் மற்றும் திருமதி . எம். ஈஸ்வரி அவர்கள் ஆஜராகியும் , பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும் , வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும் , ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும் , இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் தீர்ப்பாணையை வழங்குகின்றது.

1. பிராது தொகை ரூ.23,11,413/-ஐயும், அசல் தொகை ரூ.15,00,000/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% பின்வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும்வரை 6% பின்வட்டியும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்தவேண்டுமெனவும்,

2. வழக்கின் செலவு தொகை ரூ .86,527.50 பை.ஐ வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டுமெனவும் கட்டளையிடப்படுகிறது.

---

**<u>தொகை விபரம்</u>**

| | |
|---|---|
| 1. தாவா 1 லக்க பிராமிசரி நோட்டு அசல் தொகை | ரூ.4,50,000.00 |
| ரூ.4,50,000/-க்கு 12.10.2015 ம் தீ முதல் 30.09.2018 ம் தேதி வரை மாதம் 35 நாள் 18 க்கு 12% வீதம் வட்டி | ரூ.1,60,200.00 |
| | ------------ |
| | ரூ.6,10,200.00 |
| வட்டிக்காக 1.10.2018 ம் தேதியில் வரவான துகை | ரூ. 5,000.00 |
| | ------------ |
| | ரூ.6,05,200.00 |
| ரூ.4,50,000/-க்கு 2.10.2018 ம் தீ முதல் 15.03.2021 ம் தேதி வரை மாதம் 29 நாள் 13 க்கு 12% வீதம் வட்டி | ரூ.1,32,450.00 |
| | ------------ |
| ஆக மொத்தம் | ரூ.7,37,650.00 |
| | ------------ |

அதற்கு தமிழ்நாடு கோர்ட்டு பீஸ் ஆக்ட் செக்சன் 22 ன் படிக்கு மவுண்ட் ரூ.22,130/- கட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2. தாவா 2 லக்க பிராமிசரி நோட்டு அசல் தொகை | ரூ.3,50,000.00 |
| ரூ.3,50,000/-க்கு 20.06.2016 ம் தீ முதல் 02.05.2019 ம் தேதி வரை மாதம் 34 நாள் 12 க்கு 12% வீதம் வட்டி | ரூ.1,20,399.00 |
| | ------------ |
| ஆக மொத்தம் | ரூ.4,70,399.00 |

| | |
|---|---|
| வட்டிக்காக 03.05.2019 ம் தேதியில் வரவான தொகை | ரூ. 5,000.00 |
| | ரூ.4,65,399.00 |
| ரூ.3,50,000/-க்கு 03.05.2019 ம் தீ முதல் 15.03.2021 ம் தேதி வரை மாதம் 22 நாள் 12 க்கு 12% வீதம் வட்டி | ரூ. 78,399.00 |
| ஆக மொத்தம் | ரூ.5,43,798.00 |

அதற்கு தமிழ்நாடு கோர்ட்டு பீஸ் ஆக்ட் செக்சன் 22 ன் படிக்கு மவுண்ட் ரூ.16,314/- கட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 3. தாவா 3 லக்க பிராமிசரி நோட்டு அசல் தொகை | ரூ.3,50,000.00 |
| ரூ.3,50,000/-க்கு 15.07.2016 ம் தீ முதல் 02.05.2019 ம் தேதி வரை மாதம் 33 நாள் 18 க்கு 12% வீதம் வட்டி | ரூ.1,17,483.00 |
| ஆக மொத்தம் | ரூ.4,67,483.00 |
| வட்டிக்காக 03.05.2019 ம் தேதியில் வரவான தொகை | ரூ. 5,000.00 |
| | ரூ.4,62,483.00 |
| ரூ.3,50,000/-க்கு 04.05.2019 ம் தீ முதல் 15.03.2021 ம் தேதி வரை மாதம் 22 நாள் 11 க்கு 12% வீதம் வட்டி | ரூ.78,283.00 |
| ஆக மொத்தம் | ரூ.5,40,766.00 |

அதற்கு தமிழ்நாடு கோட்டு பீஸ் ஆக்ட் செக்சன் 22 ன் படிக்கு தொகை ரூ.16,224/- கட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 4. தாவா 4 லக்க பிராமிசரி நோட்டு அசல் தொகை | ரூ.3,50,000.00 |
| ரூ.3,50,000/-க்கு 07.08.2017 ம் தீ முதல் 14.07.2020 ம் தேதி வரை மாதம் 33 நாள் 7 க்கு 12% வீதம் வட்டி | ரூ.1,16,316.00 |
| ஆக மொத்தம் | ரூ.4,66,316.00 |
| வட்டிக்காக 15.07.2020 ம் தேதியில் வரவான தொகை | ரூ. 5,000.00 |
| | ரூ.4,61,316.00 |
| ரூ.3,50,000/-க்கு 16.07.2020 ம் தீ முதல் 15.03.2021 ம் தேதி வரை மாதம் 7 நாள் 29 க்கு 12% வீதம் வட்டி | ரூ.27,883.00 |
| ஆக மொத்தம் | ரூ.4,89,199.00 |

அதற்கு தமிழ்நாடு கோட்டு பீஸ் ஆக்ட் செக்சன் 22 ன் படிக்கு

தொகை ரூ.14,676/- கட்டப்பட்டுள்ளது.

---

<u>**செலவு தொகை விவரம்**</u>

| வ. எண். | செலவு தொகை விபரம் | வாதிகளுக்கு ரூ. பை. |
|---|---|---|
| 1. | வழக்குரைக்கான வில்லை | 69,344.00 |
| 2. | கட்டளை சேர்ப்பிப்பதற்கு | 34.50 |
| 3. | கட்டளை தயாரிக்க | 5.00 |
| 4. | வக்காலத்திற்கான வில்லை | 10.00 |
| 5. | வாதுரைக் கட்டணம் | 25.00 |
| 6. | வழக்கறிஞர் கட்டணம் சீனியர்<br>ஜுனியர் | 12,832.00<br>4,277.00 |
| | மொத்தம் | 86,527.50 |

2021-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 16-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

P SARAVANAN
Digitally signed by P SARAVANAN
Date: 2021.09.06 15:06:10 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

திண்டுக்கல்.